பெயர்: .......................... தேதி: ..........................

# விடைக்கேற்ற வினாவைத் தேர்வு செய்.

பகுதி_3

**சான்று:-** பனிச்சிறுத்தை ஆசியா கண்டத்தில் அதிகம் உள்ளது.

- [x] பனிச்சிறுத்தை எந்த கண்டத்தில் அதிகம் உள்ளது?
- [ ] பனிச்சிறுத்தைகள் எத்தனை உள்ளன?
- [ ] ஆப்பிரிக்க கண்டத்தில் பனிச்சிறுத்தைகள் காணப்படுமா?

1. புவியீர்ப்பு விசையைக் கண்டறிந்தவர் நியூட்டன்.

- [ ] புவியீர்ப்பு விசையைக் கண்டறிந்தவர் யார்?
- [ ] புவியீர்ப்பு விசை யாரால் எப்போது கண்டறியப்பட்டது?
- [ ] புவியின் ஈர்ப்பு விசை குறித்து எழுது.

2. பறவைகளில் காகம் தந்திரமுள்ளது.

- [ ] சேவல் பறவைகளில் தந்திரமுள்ளதா?
- [ ] பறவைகளில் தந்திரமுள்ளது எது?
- [ ] பறவைகள் எவ்வளவு தந்திரமுள்ளது?

**3.** அரசனின் இல்லத்தை அரண்மனை என்று அழைக்கலாம்.

- [ ] அரசனின் இல்லத்தை எவ்வாறு அழைக்கலாம்?
- [ ] மனை என்பது அரசனின் இல்லமா?
- [ ] அரண்மனை எங்கே உள்ளது?

4. திணை என்னும் சொல்லின் பொருள் ஒழுக்கம்.

- [ ] தினை என்றால் என்ன?
- [ ] பயறு வகைகளில் ஒன்று திணையா?
- [ ] திணை என்னும் சொல்லின் பொருள் என்ன?

பெயர்: .......................... தேதி: ..........................

# விடைக்கேற்ற வினாவைத் தேர்வு செய்.

1. குதிரை உருவங்கள் மரத்தினால் செய்யப்படுகின்றன.

- ☐ குதிரை உருவங்கள் எதனால் செய்யப்படுகின்றன?
- ☐ அட்டையால் குதிரை உருவங்கள் செய்யப்படுகிறதா?
- ☐ குதிரை உருவங்கள் செய்வது எப்படி?

2. பாம்பு நாக்கின் மூலம் நுகர்கிறது.

- ☐ பாம்பு எவ்வளவு நுகரும்?
- ☐ மூக்கின் மூலம் பாம்பு நுகருமா?
- ☐ பாம்பு எதன் மூலம் நுகர்கிறது?

3. தமிழ்த்தாத்தா என்று அழைக்கப்படுபவர் உ.வே.சாமிநாதர்.

- ☐ காந்தி தமிழ்த்தாத்தா என்று அழைக்கப்படுகிறாரா?
- ☐ தமிழ்த்தாத்தா என்று அழைக்கப்படுபவர் யார்?
- ☐ தமிழ்த்தாத்தா என்று எத்தனை பேர் அழைக்கப்படுகின்றார்கள்?

4. மண் அரிப்பைத் தடுக்க மரங்களை வளர்க்க வேண்டும்.

- ☐ மண் அரிப்பைத் தடுக்க என்ன செய்ய வேண்டும்?
- ☐ மண் அரிப்பைத் தடுக்க மரங்களை வெட்ட வேண்டுமா?
- ☐ மண் அரிப்பைத் தடுக்க யார் மரங்களை வளர்க்க வேண்டும்?

5. பழங்களின் அரசன் மாம்பழம்.

- ☐ ஆப்பிள் பழங்களின் அரசனா?
- ☐ மாம்பழம் ஏன் மஞ்சள் நிறத்தில் உள்ளது?
- ☐ பழங்களின் அரசன் யார்?